Available online at: http://www.advancedscientificjournal.com
http://www.krishmapublication.com
IJMASRI, Vol. 1, issue 1, pp. 42- 46, Oct. -2023
https://doi.org/10.53633/ijmasri

**INTERNATIONAL JOURNAL OF MULTIDISCIPLINARY ADVANCED SCIENTIFIC RESEARCH AND INNOVATION (IJMASRI)**

**ISSN: 2582-9130** **IBI IMPACT FACTOR 1.5** **DOI: 10.53633/IJMASRI**

**RESEARCH ARTICLE**

# *மலைப் பிரதேசங்களில் தமிழ் வட்டெழுத்து வரிவடிவத்தின் பரவல் (பொ.ஆ. 4-8 நூற்றாண்டுகள் வரை)- அண்மைக் காலப் பதிவுகள்*

*முனைவர் அர. பூங்குன்றன்*

*குமரவேல் இராமசாமி, சுதாகர் நல்லியப்பன், யாக்கை மரபு அறக்கட்டளை*

**ஆய்வுச் சுருக்கம்:**

*தமிழ்நாட்டில் அண்மைக் காலங்களில் கண்டறியப்பட்ட நடுகல் கல்வெட்டுகளும், பாறைக் கல்வெட்டுகளும் பல்லவர் காலத்தில் வட்டெழுத்து வரிவடிவம் மக்கள் சமூகத்தில் பெருவழக்காக இருந்ததைத் தெரிவிக்கின்றன. செங்கம், தர்மபுரிப் பகுதியில் பதிவான நடுகல் கல்வெட்டுகள், பூலாங்குறிச்சிக் கல்வெட்டு ஆகியவை இதற்கு முதன்மை சான்றாவணமாக உள்ளன. இக்கல்வெட்டுகள் தமிழகத்தின் உள் நிலப் பரப்பில் பதிவானவை. இச்சூழலில், சோழர் காலத்தில் தான் மலைப்பிரதேசங்களில் எழுத்து வழக்கம் பரவலாக்கம் பெற்றது என்று கருதும்போக்கு இருந்தது. சோழர் காலத்தில் பழங்குடி மக்கள் பொது சமூக நீரோட்டத்தில் இணையும் போக்கும் அதிகரித்திருந்தது. அக்காலத்தில் தமிழ் வரிவடிவத்தில் எழுதுவது பெரும் மக்கள் வழக்கமாகப் பரவியதற்கு அரசும் ஒத்துழைப்பு தந்தது. அரசு தமது உத்தரவை மக்களிடம் கொண்டுச் சேர்க்கக் கையாண்ட இச்செயலே சமூக மாற்றத்திற்கான காரணமாகக் கருதப்பட்டது. வட்டெழுத்து நடுகற்கள் மிகுதியாகப் பதிவாகியிருக்கும் உள்நிலங்களிலும்கூட சோழர் காலத்தில் தமிழ் வரிவடிவ எழுத்தே மிகுதியாகப் பயின்று வருகின்றது. ஆனால் அண்மைக் காலத்தில் கிழக்குத் தொடர்ச்சி மலைத்தொடரில் புதூர்நாடு மேல்பட்டி, செந்தாரப்பட்டி, வத்தல்மலை, பெரிய வத்தலாபுரம், ஈரெட்டி, பர்கூர் போன்ற இடங்களில் கண்டறியப்பட்ட நடுகல் கல்வெட்டுகள் பல்லவர் காலத்திற்கு சற்று முன்பாகவே மலைப்பிரதேசங்களில் எழுத்தின் பயன்பாடு வழக்கில் வந்துவிட்டதைக் காட்டுவதாக அமைகின்றது. பொ.ஆ நான்காம் நூற்றாண்டு முதல் எட்டாம் நூற்றாண்டு வரையிலான காலவெளியில் வட்டெழுத்துப் பயன்பாடு எவ்விதம் மலைப்பிரதேசங்களில் பரவியிருந்தது என்றும், அதன் சமூக பொருளியல் தாக்கங்கள் குறித்தும் விவரிக்க முயலுவதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.*

**குறிச்சொற்கள்**: *வட்டெழுத்து, கல்வெட்டு, நடுகல், நடுகல் எழுத்து, நடுகல் சமூகம், நடுகல், மொழி, மலைப் பிரதேசங்கள், பல்லவர்கால எழுத்து, சோழர்கால எழுத்து,வரிவடிவம், தொறு பூசல், மாட்டு வணிகம், தமிழ் எழுத்துக்கள், சமஸ்கிருதம், தொல்காப்பியம், சங்க இலக்கியம், நீலகண்டரைசர், மகேந்திரவர்மன், பழங்குடி மக்கள், பூலாங்குறிச்சி கல்வெட்டு, தர்மபுரி நடுகற்கள், செங்கம் நடுகற்கள், வத்தல்மலை நடுகற்கள், சித்திரமேழி பெரியநாட்டார், வீரசெட்டி, மக்கள் வழக்கு, செவ்வியல் வழக்கு.*

**முன்னுரை:**

தமிழ்நாட்டில் அண்மைக் காலங்களில் கண்டறியப்பட்ட நடுகல் கல்வெட்டுகளும், பாறைக் கல்வெட்டுகளும் பல்லவர் காலத்தில் வட்டெழுத்து வரிவடிவம் மக்கள் சமூகத்தில் பெருவழக்காக இருந்ததைத் தெரிவிக்கின்றன. செங்கம், தர்மபுரிப் பகுதியில் பதிவான நடுகல் கல்வெட்டுகள், பூலாங்குறிச்சிக் கல்வெட்டு ஆகியவை இதற்கு முதன்மை சான்றாவணமாக உள்ளன. இக்கல்வெட்டுகள் தமிழகத்தின் உள் நிலப் பரப்பில் பதிவானவை. இச்சூழலில், சோழர் காலத்தில் தான் மலைப் பிரதேசங்களில் எழுத்து வழக்கம் பரவலாக்கம் பெற்றது என்று கருதும் போக்கு இருந்தது. சோழர் காலத்தில் பழங்குடி மக்கள் பொது சமூக நீரோட்டத்தில் இணையும் போக்கும் அதிகரித்திருந்தது. அக்காலத்தில் தமிழ் வரிவடிவத்தில் எழுதுவது பெரும் மக்கள் வழக்கமாகப் பரவியதற்கு அரசும் ஒத்துழைப்பு தந்தது. அரசு தமது உத்தரவை மக்களிடம் கொண்டுச் சேர்க்கக் கையாண்ட இச்செயலே சமூக மாற்றத்திற்கான காரணமாகக் கருதப்பட்டது. வட்டெழுத்து நடுகற்கள் மிகுதியாகப் பதிவாகியிருக்கும் உள் நிலங்களிலும்கூட சோழர் காலத்தில் தமிழ் வரிவடிவ எழுத்தே மிகுதியாகப் பயின்று வருகின்றது. ஆனால் அண்மைக் காலத்தில் கிழக்குத் தொடர்ச்சி மலைத்தொடரில் புதூர்நாடு மேல்பட்டி, செந்தாரப்பட்டி, வத்தல்மலை, பெரிய வத்தலாபுரம், ஈரெட்டி, பர்கூர் போன்ற இடங்களில் கண்டறியப்பட்ட நடுகல் கல்வெட்டுகள் பல்லவர் காலத்திற்கு சற்று முன்பாகவே மலைப்பிரதேசங்களில் எழுத்தின் பயன்பாடு வழக்கில் வந்துவிட்டதைக் காட்டுவதாக அமைகின்றது. பொ.ஆ நான்காம் நூற்றாண்டு முதல் எட்டாம் நூற்றாண்டு வரையிலான காலவெளியில் வட்டெழுத்துப் பயன்பாடு எவ்விதம் மலைப்பிரதேசங்களில் பரவியிருந்தது என்றும், அதன் சமூக பொருளியல் தாக்கங்கள் குறித்தும் விவரிக்க முயலுவதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

**தமிழ் வட்டெழுத்து வரிவடிவம் குறித்த முன் ஆய்வுகள்.**

இந்தியாவில் எழுத்து வரிவடிவம் குறித்த ஆய்வுகள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் தொடங்கியது. ஏ.சி பர்னல்( 1874)[1] பியூலர் (1896)[2] ஓஜா (1918)[3], ஏ.எச். தானி (1963)[4] போன்றோர் இத்துறையில் முன்னோடி ஆய்வாளர்களாக விளங்கினர். டி.ஏ. கோபிநாதராவ் (1910)[5] தி.நா. சுப்பிரமணியன் (1957)[6] சி.சிவராமமூர்த்தி(1966), ஐராவதம் மகாதேவன் (1966)[7] டி.வி. மகாலிங்கம் (1967)[8] இரா. நாகசாமி (1968)[9] கே.ஜி. கிருஷ்ணன் (1974,1983)[10] ஆகியோர் தமிழ்நாட்டின் வரிவடிவங்கள் பற்றிய ஆய்வுகளை நிகழ்த்தியுள்ளனர். தமிழ்நாட்டு எழுத்து வளர்ச்சி என்னும் பொருண்மையில் ரா. கோவிந்தராஜ் என்பவர் செய்த ஆய்வு நூலில் காலம் வாரியாக எழுத்தின் வரிவடிவ வளர்ச்சி குறித்து ஆய்வு செய்யப்பட்டுள்ளன[11] தமிழ்நாட்டைப் பொறுத்தவரை பொ.ஆ.மு. ஆறாம் நூற்றாண்டளவில் பானையோட்டில் தமிழி வரிவடிவங்கள் பதிவாகியுள்ளன[12] கல்லில் பொறிக்கப்பட்ட தமிழி வரிவடிவங்கள் பொ.ஆ.மு. நான்காம் நூற்றாண்டிலிருந்து கிடைக்கின்றன[13] கல்லில் பொறிக்கப்பட்ட வரிவடிவங்கள் கி.பி நான்காம் நூற்றாண்டு வரையில் பெரியளவிலான வடிவ மாற்றத்திற்கு உட்படாமல் தொன்மையான தமிழியின் வடிவத்தை ஒத்தே பயின்று வரக் காணலாம்[14] சிற்சில மாற்றங்கள் உண்டெனினும் அவை மொத்தமாக தமிழிக்கான வடிவத்தில் இருந்து வேறுபடவில்லை. ஆனால் பல்லவர் காலம் குறிப்பாகச் சிம்ம வர்மன் காலத்திலிருந்து கிடைக்கும் நடுகல் கல்வெட்டுக்களில் வட்டெழுத்து வரிவடிவம் பயின்று வருகின்றது. இடைப்பட்ட இரண்டு நூற்றாண்டு காலவெளியில் தமிழ் எழுத்தின் வடிவங்கள் ஒருவிதமான மாறுதலைச் சந்திக்கின்றது. அம்மன்கோயில் பட்டி, அறச்சலூர் மற்றும் பூலாங்குறிச்சி ஆகிய இடங்களில் பதிவான கல்வெட்டுகள் தமிழி வரிவடிவம் தனது அடுத்தகட்ட பரிணாம நிலைக்கு மாறுவதைக் காட்டும் ஆவணங்களாக அமைந்தன.

வட்டெழுத்தின் தோற்றம் குறித்து அறிஞர்களிடையே பலவிதமான கருத்துக்கள் நிலவுகின்றன. தனிப்பட்ட வளர்ச்சி என்கிறார் பர்னல். தமிழ் எழுத்தின் வீச்சு வடிவம் என்கிறார் பியூலர். தமிழ் பிராமியிலிருந்து வளர்ச்சி கண்டது என்கிறார் கோபிநாத ராவ். எனினும் அண்மைக் காலத்தில் கிடைக்கப்பெற்ற அறச்சலூர், பூலாங்குறிச்சி கல்வெட்டுகளும், இருளப்பட்டி, கொட்டையூர், மற்றும் பிற இடங்களில் கிடைத்த நடுகல் கல்வெட்டுகளும் தமிழி வரிவடிவத்திலிருந்தே வட்டெழுத்து தோற்றம் கண்டது என்பதை உறுதிச் செய்கின்றன[14] பொ.ஆ. 6 நூற்றாண்டு வட்டெழுத்து வரிவடித்தில் எழுதப்பெற்ற கொட்டையூர் நடுகல் கல்வெட்டில் பயின்று வரும் "சுட்ட ஞான்று" என்பதில் சு என்பது தமிழி வடிவத்தை ஒத்தே காணப்படுவதும், மற்ற எழுத்துக்கள் வட்டெழுத்து நிலையில் காணப்பெறுவதும் இங்கு குறிப்பிடத்தகுந்தது. வட்டெழுத்து, கிரந்தம், தமிழெழுத்து என கிளை எழுத்துக்கள் வழக்கில் இருந்தபோதும் வட்டெழுத்து வரிவடிவத்தின் வளர்ச்சியை மட்டுமே தமிழியிலிருந்து தொடர்ச்சியாகக் காண முடிகின்றது. மற்ற இரண்டும் சற்றேறக்குறைய ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து வெளிப்படுவதைப் பார்க்க முடிகின்றது.

**வட்டெழுத்து பரவலின் சமூகப் பண்பாட்டுக் காரணிகள்**

எழுத்தின் பரவல் என்பது அதிகாரத்தின் பரவலாகப் பார்க்கப்படுகிறது. எழுத்தின் கண்டறிதல் மானுடச் சமூகத்தில் மிகப்பெரிய புரட்சிக்கு வித்திட்டது என்பர். தமிழ்நாட்டில் தொண்டை மண்டலம், பாண்டிய மண்டலம், கொங்கு மண்டலம் ஆகியப் பகுதிகளில் வட்டெழுத்தின் பயன்பாடுப் பரவலாக மக்கள் வழக்கில் புழங்கியது. அதிலும் குறிப்பாகத் தொண்டை மண்டலம்

மற்றும் தர்மபுரிப் பகுதியில் கிடைக்கும் நடுகற் கல்வெட்டுகளில் வட்டெழுத்தே மிகுதி. இப்பகுதியில் கிடைக்கும் நடுகற் கல்வெட்டுகள் மாடுபிடிச் சண்டை, ஊர்ப் பூசல் நிகழ்வுகளைப் பேசுபவையாக உள்ளன.[16] இவை கால்நடைப் பொருளாதாரத்தை ஆதாரமாகக் கொண்டியங்கிய குழுக்களின் பண்பாட்டு ஆவணங்களாகும். பெரும்பாலான நடுகற்கள் கிடைக்கும் பகுதியில் பல்லவர் ஆட்சி நிலவியது. பல்லவர் தம் அரசு ஆவணங்களில் தமிழ் வரிவடிவத்தையும், சமஸ்கிருதம் எழுதுவதற்கு கிரந்த வடிவத்தையும் பயன்படுத்தினர். எனினும் பல்லவரின் தலைநகருக்கு அருகில் கிடைக்கும் நடுகற் கல்வெட்டுகளிலும் வட்டெழுத்து பொறிப்புகளே பயின்று வரக் காணலாம். இது வட்டெழுத்து வரிவடிவம் மக்கள் வழக்கில் கொண்டிருந்த தாக்கத்தைக் காட்டுகிறது.

வட்டெழுத்தின் பரவல் குறித்து பலவிதமான கருத்துகள் இருப்பினும் வட்டெழுத்து வணிகத்தின் வழியாகப் பரவியது என்றும், சங்க காலத்து வாணிகம் வீழ்ச்சியடைந்த பின் அவர்களே கால்நடை வணிகர்களாக மாறியிருக்க வேண்டும். கால்நடை வணிகர்களாக மாறியபோது அவர்கள் நடுகல் பகுதியில் தங்கினர். நடுகல்லில் கி.பி. ஆறாம் நூற்றாண்டு முதல் பதினோறாம் நூற்றாண்டு வரை வணிகர்கள் குறிக்கப்படுவது இதற்கு ஆதரவாக நிற்கின்றது எனவும், அர. பூங்குன்றன் குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது.[17] நடுகற்கள் அமையப்பெற்ற இடங்கள் பெருவழிப் பாதைகளாகவும், கூடல் (சந்தை) ஊர்களாகவும் வருவதைக் காணலாம். சித்திரமேழி பெரியநாட்டார், வீரசெட்டி போன்றோரும் பத்தாம் நூற்றாண்டளவில் தொறு மீட்டல் பூசலில் மாண்ட செய்தி பதிவாகியிருக்கிறது. சங்க காலத்தில் முல்லை திணை வாழ்வியலில் தம் குலம் காக்கும் பூசலில் மாண்ட வீரர்களுக்கு நடுகல் எடுக்கும் பண்பாடாக இருந்து நாளடைவில் கால்நடை வணிகத்தின் வளர்ச்சியால் சிறப்பங்கள் எடுப்பதும், மக்களின் தொன்மை வரிவடிவமான வட்டெழுத்தில் கல்வெட்டுகள் எழுதும் வழக்கமாகவும் மக்கள் சமூகத்தில் பரவியிருக்கிறது.

### அண்மைக் கால கண்டறிதல்கள்

தமிழ்நாட்டில் தொடர்ந்து நடுகற்கள் கண்டறியப்படும் செய்திகள் தினசரிகளில் வெளியாவதைப் பார்க்க முடிகின்றது. தன்னார்வ குழுக்கள், ஆய்வாளர்கள், ஆய்வு மாணவர்கள் ஆகியோரது பங்கு இதில் முதன்மையானது. யாக்கை மரபு அறக்கட்டளை கடந்த 2020 ஆண்டிலிருந்து அண்மைக் காலம் வரையில் சுமார் 10 க்கும் மேற்பட்ட வட்டெழுத்து நடுகற்களைக் கண்டறிந்து வெளியிட்டுள்ளது.[18] அவற்றில் செந்தாரைப்பட்டி, பர்கூர், வத்தல் மலை, ஆகிய இடங்களில் கண்டறியப்பட்ட நடுகல் கல்வெட்டுகள் வரலாற்றுச் சிறப்பு மிக்கவையாக ஆய்வுலகின் கவனத்தைப் பெற்றது. அந்நடுகற்கள் இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. மேலும் ஜவ்வாது மலையில் திரு. இரா.ரமேஷ் என்பவரால் கண்டறியப்பட்டப் புதூர் நாடு மேல்பட்டு நடுகல்லும்,[19] தர்மபுரி மாவட்டம் பென்னாகரம் அருகில் பெரிய வத்தலாபுரம் எனும் ஊரில் ஆய்வு மாணவர் அ.முத்தரசு என்பவர் கண்டறிந்த வட்டெழுத்து நடுகல் கல்வெட்டுகளும் மலைப் பகுதியில் வட்டெழுத்தின் பரவலைப் பேசும் முக்கிய ஆவணங்களாகின்றன.[20] இவையனைத்தும் இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றது.

### செந்தாரபட்டி நடுகற்கள்

சேலம் மாவட்டம் செந்தாரபட்டியில் ஐந்து நடுகற்கள் அண்மையில் கண்டறியப்பட்டன[20] இவை, பொ.ஆ. 6 ஆம் நூற்றாண்டு அளவில் பச்சை மலை, கொல்லிமலை பகுதியில் நிலவிய அரசியல் சூழலை விளக்கும் சான்றாகத் திகழ்கின்றன. சிம்மவர்மன், சிம்ம விஷ்ணு போன்ற பல்லவர் காலத்திய நடுகற்கள் கிடைக்கத் தொடங்கிய காலம் அது. ஐந்து நடுகற்களிலும் வட்டெழுத்து வரிவடிவம் பயின்று வருகின்றது. அக் காலகட்டத்தில் தமிழகத்தின் மத்திய நிலப்பரப்பில் நுழையும் கணவாய் பரப்புகளான மேற்குறிப்பிட்ட பகுதிகளில் நீலகண்டரைசர் போன்ற தனித்த இனக்குழுத் தலைவர்கள் தனித்து ஆட்சி செலுத்தியதை நடுகல் கல்வெட்டுகளின் வழியே அறியமுடிகிறது. இந்த நடுகற்கள் நீலகண்டரைசர் பெயரோடு தொடங்குகின்றன.[21] ஆனால் ஆட்சியாண்டு எதிலும் குறிக்கப் பெறவில்லை. நீலகண்டரைசர் செங்கம் பகுதி தொண்டமானூர் நடுகல், கள்ளக்குறிச்சி அருகேயுள்ள மேல் சிறுவளூர் நடுகற்களில் குறிக்கப் பெறுகிறார்.

தொண்டமானூர் நடுகல் சிங்க விண்ண பருமனின் முப்பதாவது ஆட்சியாண்டு நடுகல் ஆகும். மேல் சிறுவளூர் நடுகல் சிங்கபருமனின் இருபத்து நான்கு, ஒன்பதாவது ஆட்சியாண்டைக் குறிக்கிறது. உள்ளூர் தலைவர்களாகக் குறிக்கப் பெறும் பொற்சாத்தனார், பொன்னுழுந்தனார், ஆகியோர் மேல்சிறுவளூர், தொண்டானூர் நடுகற்களில் பூசலைத் தொடங்கி வைத்தவர்களாக வருகின்றனர். இந்தக் கல்வெட்டுகளில் நீலகண்டரைசர் என்று கூறப்பெறும் பெயர் மேல்சிறுவளூர், தொண்டானூர் கல்வெட்டில் நீலகண்டரைசரு எனக் குறிக்கப்பட்டுள்ளது. நீலகண்டரைசரு எனக் குறிப்பது வழக்குச் சொல். அவர் என்பதை அவரு என்றும், ஊர் என்பதை ஊரு என்றும் கூறுவது வாய்மொழி வழக்கு. மேல் சிறுவளூர் தொண்டானூர் நடுகல் கல்வெட்டுகள் மக்கள் வழக்கு சொல் பயன்படுத்தியுள்ளது. ஆனால் செந்தாரைப்பட்டி நடுகல் கல்வெட்டுகள் தமிழ் இலக்கண மரபைப் பின்பற்றியுள்ளன.

செந்தாரப்பட்டி நடுகற்கள் மலைப் பரப்பின் கணவாய் போன்ற இடத்தில் நடைபெற்றப் பூசலைத் தெரிவிக்கிறது. மேலும் பல்லவர் அரசின் ஆளுகைக்கு உட்படாத நிலத்தில் வட்டெழுத்தின் பயன்பாடு இருந்திருப்பதும், எழுத்து இலக்கணச் சுத்தமாகச் செவ்வியல்

மரபில் எழுதப்பெற்றிருப்பதும் மக்கள் வழக்கில் வட்டெழுத்தின் ஆதிக்கம் குறித்து அறிய உதவுகிறது.

**வத்தல்மலை நடுகற்கள்**

அண்மையில் தர்மபுரி மாவட்டம் வத்தல் மலையின் உச்சியில் நான்கு நடுகற்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது.[22] இவையனைத்தும் வட்டெழுத்தில் எழுதப்பட்டவை. முதல் நடுகல் பல்லவ மகேந்திரவர்மன்(பொ.ஆ.590-630) காலத்தியது. மகேந்திரவர்மன் காலத்திய நடுகல் கல்வெட்டானது.

ஊரைக் காக்கும் பூசலில் பகைவர்களுடன் போரிட்டு மாண்ட இரண்டு வீரர்களுக்கும் ஒன்றாக எடுக்கப்பட்டதாகும். இது மிகவும் அரிதான நிகழ்வு. வெகுசில இடங்களில் மட்டுமே இவ்வாறாக இரண்டு வீரர்களுக்கும் சேர்த்து ஒரே கல்லில் சிற்பம் வடிக்கப்படுவது நடந்திருக்கிறது. இவ்விரு வீரர்களும் ஒரே நிகழ்வில் மாண்டவர்கள் ஆகலாம். நடுகல் வீரர்களின் இடுப்பில் அரையாடையுடன் ஆடைக்கச்சும், உறைவாளும் காட்டப்பட்டுள்ளது. வீரர்களின் இடக்கையில் வில்லம்பும், வலக்கையில் குறுவாள் ஏந்திய நிலையிலும் சிற்பமைப்பு உள்ளது. "கல்வெட்டில் அரசர் பெயர்கள் மயீந்திர பருமன், ஈச்சுவர பருமன் (பொ.ஆ.669-690) என்று நேரடியாக மக்களின் வழக்குத் தமிழ்ச் சொற்களாகப் பயின்று வருவதைக் காணலாம். மகேந்திரவர்மன் மற்றும் பரமேஸ்வர வர்மன் என்பது வடமொழிச் சொல்லாடல். அதுவே அவர்களது அதிகாரப்பூர்வ ஆவணங்களில் காணப்பெறும். எனினும் நடுகற்களில் 'பருமன்' மக்கள் வழக்கில் மொழிபெயர்த்து எழுதப்பட்டுள்ளது கவனிக்கத்தக்கது". மேலும் இரண்டு நடுகற்களும் வட்டெழுத்தில் எழுதப்பட்டவை எனினும் எழுத்துக்கள் பெருமளவில் சிதைந்து காணப்பெறுகின்றன.

**பர்கூர் நடுகற்கள்**

ஈரோடு மாவட்டம் பர்கூர் மலையிலுள்ள ஈரெட்டி பகுதியில் மூன்று வட்டெழுத்து கல்வெட்டுகள் அண்மைக் காலங்களில் கண்டறியப்பட்டுள்ளது. "துற கை யுள்ளாறு கல்" எனும் வாசகத்துடன் காணப்பெறும் கல்வெட்டு பொ.ஆ நான்காம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும். "கருமதச் சாத்தன் கல்" எனும் வாசகம் கொண்டக் கல்வெட்டு பொ.ஆ ஐந்தாம் நூற்றாண்டைச் சார்ந்தது.[23] ஒரு நடுகல் கல்வெட்டு பொ.ஆ பத்தாம் நூற்றாண்டு எழுத்தமைவுக் கொண்டிருக்கிறது[24]. இம்மூன்று நடுகற்களும் வட்டெழுத்து பொறிப்புக் கொண்டவையாகும். கர்நாடகாவிலிருந்து தமிழ்நாட்டிற்கு பயணிக்கும் வழிப்பாதையில் தமிழகத்தின் எல்லையில் அமையப்பெற்ற இவ்விடத்தில் பதிவான நடுகற்களில் வட்டெழுத்துக் கல்வெட்டுகளே வருவது இவ்வெழுத்தின் பரவலைக் காட்டுகிறது.

ஜவ்வாது மலை புதூர்நாடு நடுகல்

திருப்பத்தூர் மாவட்டம் மேல்பட்டு வேடியப்பன் கோயிலின் எதிர்புரம் உள்ள தோட்டத்தில் சிம்ம விஷ்ணு காலத்திய வட்டெழுத்து நடுகல் பதிவாகியுள்ளது. "பணங்கோதை பக்காடன்" எனும் வீரன் தொறுப் பூசலில் மாண்டச் செய்தி பதிவாகியுள்ளது.[25] சிம்ம விஷ்ணு பல்லவன் ஆறாம் நூற்றாண்டில் ஆட்சி செய்தவர். இங்கு பதிவான நடுகல் எழுத்து வரிவடிவம் பொ.ஆ. எட்டாம் நூற்றாண்டைச் சார்ந்ததாக உள்ளது. ஆற்றுப்படை நூலான மலைபடுகடாமில் நவிர மலையென்னும் ஜவ்வாது மலையில் நடுகற்கள் நடப்பட்டிருந்த தரவுகள் வருகின்றன. அதன் தொடர்ச்சியாக பல்லவர் காலத்திலும் நடுகல் மரபு தொடர்ந்திருக்கிறது. ஆயினும் பல்லவர் காலத்திய கல்வெட்டுகள் ஜவ்வாது மலையில் குறைவாகவே உள்ளன. சோழர் காலத்தில் மிகுதியானக் கல்வெட்டுகள் பதிவாகியிருப்பதைக் காணலாம்.

தர்மபுரி பெரியவத்தலாபுரம்& சின்னவத்தலாபுரம் நடுகற்கள்

தர்மபுரி மாவட்டம் பெரிய வத்தலாபுரம் மற்றும் சின்ன வத்தலாபுரம் ஆகிய ஊர்களில் ஆறு நடுகற்கள் அண்மையில் கண்டறியப்பட்டன.[26] அவற்றில் ஐந்து நடுகற்கள் வட்டெழுத்தில் எழுதப்பட்டவை. இரண்டு நடுகற்கள் மகேந்திரவர்மன் காலத்தில் எழுதப்பட்டவை. மற்ற மூன்று நடுகற்களும் உள்ளூர் இனக்குழுத் தலைவர்களின் பெயரைத் தாங்கிய நடுகற்களாகும். "கோன் கொற்ற பாண்டிய ஏனாதி", "கூத்தப்பாடி சான்றார்", "ஓலோக்கரையன்" ஆகிய இனக்குழுத் தலைவர்கள் சுட்டப் படுகின்றனர். இவை தொறு பூசல், ஊரெறிந்த பூசல் போன்ற நிகழ்வுகளைப் பேசுகின்றன. பேச்சு வழக்கு சொற்களே பயின்று வரும் இக்கல்வெட்டுகள், காவிரிக் கரையின் ஓரத்தில் கிழக்குத் தொடர்ச்சி மலையின் வனக்காடுகளுக்கு நடுவேயும் வட்டெழுத்தின் பரவல் ஆதிக்கம் செலுத்தியதையே காட்டுகின்றன.

**முடிவுரை**

பர்கூர் மலை நடுகற்கள் கடல் மட்டத்திலிருந்து சற்றேறக்குறைய 1000 மீட்டர் உயரத்தில் அமையப்பெற்றவை. வத்தல் மலை நடுகற்கள் கடல் மட்டத்திலிருந்து சற்றேறக்குறைய 1050 மீட்டர் உயரத்தில் பதிவானவை. செந்தாரப்பட்டி நடுகற்கள் கடல் மட்டத்திலிருந்து சற்றேறக்குறைய 300 மீட்டர் உயரத்தில், கணவாய் பரப்பில் அமையப்பெற்றவை. புதூர் நாடு நடுகல் கடல் மட்டத்திலிருந்து சற்றேறக்குறைய 900 மீட்டர் உயரத்தில் நடப்பட்டுள்ளது. பெரிய வத்தலாபுரம் நடுகற்கள் கடல் மட்டத்திலிருந்து சற்றேறக்குறைய 400 மீட்டர் உயரத்தில் நடப்பட்டுள்ளன. இவையனைத்தும் தமிழகத்தின் வெவ்வேறு திசைகளில், பண்டைய வரலாற்று பிரிவுகள் பலவற்றை உள்ளடக்கிய நிலப்பரப்புகள் ஆகும்.

அண்மைக் காலங்களில் மேற்குறிப்பிட்ட இடங்களில் கண்டறியப்பட்ட நடுகற்கள் பொ.ஆ. 4 முதல் பொ.ஆ. 7 வரையிலான காலவெளியில் வட்டெழுத்தில் எழுதும் வழக்கம் பரவியிருந்ததை அறிவிக்கின்றன. அரசின் வழக்கில் இல்லாத ஓர் வரிவடிவம் மக்கள் வழக்கில் பரவியதற்கு அக்காலத்திய மக்கள் சமூகத்தின் கால்நடைப் பொருளாதார நிலையும், அவர்கள் கொண்டிருந்த வாணிகத் தொடர்பும் காரணம் என்றாலும், தமிழி வரிவடிவத்தில் இருந்து இயல்பான வடிவ திரிபால் வட்டெழுத்து வரிவடிவம் பரிணமித்ததும் மற்றொரு காரணம் என்ற கருத்தும் நிலைபெறுகிறது. மேலும் அண்மைக் கால

கண்டறிதல்கள் சோழர் காலத்தில் தான் மலைப் பகுதிகளுக்கு எழுத்து பரவியது என்ற கருதுகோளுக்கு முற்றுப் புள்ளி வைக்கின்றன. அடர்த்தியான வனப் பரப்புகள், உயரமான மலைத்தொடர்களிலும் எழுத்தின் பரவல் இருந்தது என்பதற்கும் சான்று பகர்கின்றன. இவை பல்லவ அரசர்களின் பெயரோடும், அவர்களது பெயரின்றி உள்ளூர் ஆட்சியாளர்களின் பெயர்களோடும், வட்டார வழக்குச் சொற்களோடும், செவ்வியல் சொற்களோடும் என பல்வகைப்பட்ட தன்மையுடன் நடுகல் கல்வெட்டுகள் கிடைப்பதும் தெரிய வருகின்றது. மலைப் பிரதேசங்களில் கிடைக்கும் சில நடுகற்களில் வரும் கல்வெட்டு எழுத்துகள் அழகியல் தன்மைக் குறைந்தும், பிழைகளோடும், தெளிவற்ற நிலையிலும் காணப்பெறுகின்றன.

**ஆய்வுக்குறிய புத்தகங்கள்**


1. *Burnell, A.C. (1874). "Elements of South Indian Palaeography" (From 4th to 17th century AD). London, 1874 (Reprint 1968)*
2. *Buhler and George (1980). "Indian Palaeography", 1896 (Indian Reprint, New Delhi. 1980).*
3. *Dani, A.H. (1963). "Indian Palaeography", Delhi, 1963.*
4. *Gopinatha Rao, LA. (1910). Some Chola Inscriptions with a charter on the Evolution of the Tamil-Grantha Alphabet, Travancore Archaeological Series, L. 1910-13, pp. 299-358, Specimens of Vatteluttu Inscriptions. Ibid. pp. 395-431.*
5. *Subramanian, T.N. (1957). The Tamil Palaeography', South Indian Temple Inscriptions, Vol.III, part II, Madras Govt. Oriental Series, Madras, 1957, pp.1499-1610. (This was originally published by the author as a separate monograph in Tamil in 1938).*
6. *Mahadevan and Iravatham. (1968). "Corpus of the Tamil Brahmi Inscriptions", Seminar on Inscriptions, ed. R. Nagaswamy, Madras, 1968, pp. 57-73 (Originally presented in the seminar in 1966).*
7. *Mahalingam, T.V. (ed.), A Topographical List of Inscriptions in the Tamil Nadu and Kerala States. ICHR and Chand & Co., 1985-91.*
8. *Nagasamy, R. (1968). "The origin and evolution of the Tamil Vatteluttu and Grantha Scripts", Proceedings of the II International Conference-Seminar, Tamil Studies, Vol.II, Madras, 1968, pp.410-415.*
9. *Krishnan, K.G. (1974). "Brahmi Script in Tamil Nadu", Journal of Epigraphical society of India, Vol. I (1974) pp.26-30.*
10. *Govindaraj. R. (2006). "Evolution Of Scripts In Tamilnadu", Thamilakath Tholliyal Kazhakam, (second Edition 2006).*
11. *Keeladi, "An Urban Settlement of Sangam Age on the Banks of River Vaigai", Department of Archaeology, Government of Tamilnadu.*
12. *அர. பூங்குன்றன், "நடுகல் கல்வெட்டுகள்", Heritage Treasure Piblishers, (2017) page.51.*
13. *Govindaraj. R, "Evolution Of Scripts In Tamilnadu", Thamilakath Tholliyal Kazhakam, (second Edition 2006). P. 2.*
14. *ibd, P. 4.*
15. *Nagaswamy, R., (ed.), Dharmapuri Mavatta kalvettukkal, State Dept. of Archaeology Madras, 1975.*
16. *அர. பூங்குன்றன், "நடுகல் கல்வெட்டுகள்", Heritage Treasure Piblishers, (2017) P.18.*
17. *ஆவணம் இதழ் 31, 32, தொல்லியல் கழகம் வெளியீடு.*
18. *ஆவணம் இதழ் 24. P.20.*
19. *ஆவணம் இதழ் 31. P. 200, 207.*
20. *https://www.thehindu.com/news/cities/Coimbatore/hero-stones-found-in-sentharapatti-village-in-salem/article33234312.ece.*
21. *குமரவேல் இராமசாமி, சுதாகர் நல்லியப்பன், "செந்தாரப்பட்டி நடுகற்கள்", ஆவணம் இதழ் 32/2021, தொல்லியல் கழகம், P.185.*
22. *https://timesofindia.indiatimes.com/city/salem/four-hero-stones-from-pallava-dynasty-discovered-in-tribal-region/articleshow/103679360.cms?from=mdr*
23. *அர. பூங்குன்றன், "நடுகல் கல்வெட்டுகள்", Heritage Treasure Piblishers, (2017) P.56&67.*
24. *குமரவேல் இராமசாமி, சுதாகர் நல்லியப்பன், "செந்தாரப்பட்டி நடுகற்கள்", ஆவணம் இதழ் 32/2021, தொல்லியல் கழகம், P.191.*
25. *இரா. ரமேஷ், "திருப்பத்தூர் பகுதியில் சில கல்வெட்டுகள்", ஆவணம் இதழ் 24/2013, தொல்லியல் கழகம், P.20.*
26. *அ. முத்தரசு, "சின்ன வத்தலாபுரம் வட்டெழுத்து நடுகற்கள்&பெரிய வத்தலாபுரம் ஒலோக்கரையன் நடுகற்கள்", ஆவணம் இதழ் 31/2020, தொல்லியல் கழகம், P. 200& 207.*


*********